முருகப்பெருமான் துணை

**மகான் மயூரேசர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.04.2024,** திங்கட்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அவதார ஞான குருவே
மாறுதலை உலகம் அடைய
மாதவசியாக வந்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை சோபகிருது சேல்திங்கள்
அச்சமற மூவாறோர் திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 19 ம் நாள், 01.04.2024, திங்கட்கிழமை)
3. வாரமதில் மயூரேசர் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமிலா தொண்டர்படைகள்
சுத்தநெறி கொண்டமைக்க
4. அமைக்க பிரணவக்குடில் படைத்து
ஆறுமுகப் பெருமான் அருளவே
அமைத்திடும் ஏழாம்படைவீட்டில்
அரங்கன் வழி மக்கள் வர
5. வருவதுடன் அரங்கன் கரம்பட
வல்லமைபட பெரும் தீட்சையை
குருவே என மக்கள் ஏற்று
கும்பிட்டு சைவநெறிபட வாழ
6. வாழவே நித்ய பூசைகளுடன்
வணங்கி தரும சேவையை
ஞாலமதில் செய்து வருக
நம்பிக்கை வளரும் வண்ணம்
7. வண்ணமுடன் உலகோரும் அறிய
வணங்கி அரங்கன் புகழை
எண்ணம் வழி ஏற்கும்படி
எங்கும் பரப்பி வர

8. வருகவே கலியுகமக்களுக்கு
வரமாக அரங்க மகானின்
குருவருள் திருவருளாக மாறி
குறைவின்றி குவலயம் தன்னில்
9. தன்னிலே ஆற்றலாக இறங்கி
தரணி காக்கப்படுமப்பா
இன்னலின்றி சமூகமாற்றமாக
எங்கும் சன்மார்க்க சங்க
10. சங்கநெறி சகலதுமாக
சர்வமுமாக நிரம்பி இனிதே
ஓங்கார உலகம் ஆகும்
ஓங்காரன் ஆளுமை வர
11. வருகவே வையகம் தன்னில்
வடிவேலன் ஞான ஆட்சி
பெருமைபட அரங்கனால் அமையும்
புகன்றிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–